**<u>IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE SHOLINGANALLUR</u>**

**<u>OS. No.841/*2024*</u>**

Deposition of Witness for Plaintiff/Defendant Solemnly Affirmed by Tmt. S.Ramalakshmi, Assistant in accordance with the provisions of Act X of 1873 on 27.01.2026

| | | | |
|---|---|---|---|
| Name(சாட்சி) | கிராம நிர்வாக அலுவலர் | Religion | |
| Father Name | | Age | |
| Village | ஈஞ்சம்பாக்கம் | Calling | |
| Taluk | | | PW2 |

<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>

1. வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்13/6A3 , புதிய சர்வே எண் 13/13A ஈஞ்சம்பாக்கம் கிராமத்தில் உள்ள நிலத்திற்கு உண்டான ஆவணங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க சம்மன் சோழிங்கநல்லூர் தாசில்தாருக்கு அனுப்பப்பட்டது. வேறு பணி உள்ளதால் ஈஞ்சம்பாக்கம் கிராம நிர்வாக அலுவலர் தனக்கு பதிலாக சாட்சியம் அளிக்க ஆவணங்களுடன் அனுமதி கடித்ததுடன் அனுப்பி உள்ளார். அந்த அனுமதி கடிதம் நீதிமன்ற சான்றாவனம்1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன சர்வே எண்ணிற்கு உண்டான அ பதிவேடு மற்றும் அடங்கல் பஸ்லி ஆண்டு 1435, அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்13/6A3 என்ற சர்வே எண் எங்களுடைய கோப்பில் இல்லை.

2. யூ.டி.ஆர் வழங்குவதற்கு முன்பு உள்ள ஆவணத்தில் பார்த்தால் தான் தெரியவரும். தற்போது உள்ள புதிய சர்வே எண்13/13A என்ற சர்வே எனக்கு உண்டான பழைய சர்வே எண்13/6A3C2 பஞ்சநாதன் பெயரில் உள்ளது. அதற்குண்டான ஆவணங்களான அ பதிவேடு மற்றும் அடங்கல் ஆகியவைகளுக்கு உண்மை நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அந்த உண்மை நகல்கள் ExX1 and ExX2

ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் அனுப்பப்பட்டுள்ள சொத்து விவரத்திற்கு உண்டான FMB மற்றும் ஆன்லைன் பட்டா(2Nos)தாக்கல் செய்துள்ளேன். அந்த உண்மை நகல்கள் ExX3 and ExX4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பட்டா எண் 6249 புல எண்13/13B உண்டான சொத்து இருக்கு விஸ்தீரணம் சுமார் 2000 சதுர அடி ஆகும். வழக்கு சொத்தை நான் நேரடியாக பார்த்து உள்ளேன். பட்டா எண் 5735 சர்வே எண்13/13A பஞ்சநாதன் மகன் பாஸ்கர் பெயரில் உள்ளது. இதற்கு உண்டான விஸ்தீரணம் சுமார் 600 சதுர அடி ஆகும்.

<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

Sd/-M.N.ராஜநந்திவர்மசிவா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
சோழிங்கநல்லூர்.